செ.வெ.எண்:06 நாள்:06.03.2017

# அரியலூரில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (06.03.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கட்கிழமை **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று **(06.03.2017)** நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 274 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இம்மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த வங்குடி கிராம ஊராட்சி செயலாராக பணிபுரிந்த திரு.து.பரமசிவம் என்பவர் பணியிடையே காலமானதால் அவருடைய வாரிசுதாரான அவரது மனைவி திருமதி.கே.ஜெயமேனகா காந்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவலக உதவியாளாராக நியமனம் செய்யப்பட்ட பணி ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும், அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், வடவீக்கம் கல்லாத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் அங்காடி விற்பனையாளராக பணிபுரிந்த திருமதி.எம்.பிருந்தாதேவி பணியிலிருக்கும்போதே 03.02.2017 அன்று விபத்தின் மூலம் மரணம் அடைந்ததையொட்டி அவருக்கு சேரவேண்டிய வருங்கால வைப்புநிதி தொகை ரூ.76,103/- மற்றும் ஈட்டிய விடுப்பு மற்றும் பணிக்கால ஊதியமாக ரூ.18,660/- ஆக கூடுதல் ரூ.94,763/-க்கான காசோலையினை அவர்களது வாரிசுதாரர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.லோகேஸ்வரி, மண்டல இணைப்பதிவாளர் திரு.இரா.தயாளன், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.ஜெ.பாலாஜி, பொது விநியோகத்திட்ட துணைப்பதிவாளர் திரு.கே.கே.செல்வராஜ் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**